
# சுவாதி நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ சுவாதி சக்தி**

பரவு சாட்சாத்காரம், நிரவயவம்,

கற்பனாதீதம், நிர்விகாரம்.

**3. திருப்பாவைபாசுரம் – 21 சுவாதி இயல்பு**

கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தன்கலந்து

பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே

காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து

வா நறுங்குழ லாய்ச்சியர் மத்தினால்

ஓசைப் படுத்த தயிரரவம் கேட்டி லையோ

நாயகப் பெண்பிள்ளாய் நாராய ணன்மூர்த்தி

கேசவனைப் பாடவும்நீ கேட்ட கிடத்தியோ

தேச முடையாய் திறவேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/lMeMLglNkPs**

**விளக்கம் :**

கீசு கீசுயென்றெங்கும் ஆனை சாத்தான் கலந்து நாயக பெண் பிள்ளையாய் உனது ஆசீர்வாதமும் வழிகாட்டுதலும் எங்களுக்கு தேவை. உன்னை கேட்க எங்கட்கு பயமாக இருக்கிறது. ஆனால் கேட்டுவிட்டால், அருள் ஆசியை கொடுத்து எங்களை திக்கு முக்காட செய்து விடுகிறாய்.

எனவே, பேய் பெண்ணே என்று ஒதுங்க முடியவில்லை; பெண்பிள்ளாய் என்று நெருங்க முடியவில்லை. காசும், பிறப்பும் பரபரப்பாகி அதுவே உன்னிடம் கலகலப்பாகிறது. எனவே உன்னுடைய கனவு சுறுசுறுப்பாகிறது.

கண்கள் தாண்டி காதுகளுக்கு வந்தால், இலக்கை தவிர எந்த தயிரரவமே உனக்கு கேட்காது. அதாவது ஸ்வாதியின் முயற்சிகள் நேசமுடையவைகள்; நேசமுடையவர்கள் நரசிம்மனை பாட பாட ஸ்வாதி அனைத்து ஆலோசனைகள் வழங்கும். அது மட்டும் இல்லாமல் செய்யும் காரியங்கள் அனைத்தும் விகாரமில்லாமல் கம்பீரம் காக்கும் அனைத்து செல்வங்களுக்கும் சாவியாக இருந்து பொக்கிஷத்தை திறக்கும்.

அதீதமான கற்பனைகள் நிறைந்த சுவாதி ; பேச்சரவம் கேட்க முடியாத பேய்பெண்ணாகவும் தயிரரவம் கேட்க முடியாத நாயகப் பெண் பிள்ளையாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. பரபரப்பு நிறைந்த பேச்சரவங்களை மனித மனங்களை மனம் மாற்றங்களை உள் வாங்கி எந்த விகாரமும் வெளிக்காட்டாமல் செயல்படுவதே சுவாதியாகும்.

தங்கக் காசு மாலைகளும், வைர புன்னகைகளும் ஒருங்கே கலந்து கலகலப்புடன் நினைத்ததை முடிக்கும், வாச நறுங்குழல் அழகு நிர்வாகமே நிர அவயவமாகும் நாயகப் பெண் பிள்ளையாக இருந்து, நாலு பேருக்கு நல்ல ஆலோசனைகளை தந்து, தயிரைக் கடந்து நெய்யையும், வெண்ணையையும் கைகாட்டி சாக்ஷாத்காரமளிப்பதே சுவாதியின் தனிப் பெருமையாகும்.

நாராயணன் மூர்த்தியாக தேசமெல்லாம் பரவ வேண்டும் என்ற சாக்ஷாத்காரம் பல்கி பெருகி கதவு திறந்தால் காட்சி கிடைக்கும். காட்சியின் மூலமாக சாக்ஷாத்காரம் அல்லது அருளாசி கிடைக்கும் என்பதை வலியுறுத்தவே திறவேலோராக சுவாதி விளங்குகிறது. ஸ்வாதியே வருக! ஸ்வாதியே அருள்க!

## 4. வேதத்தில் சுவாதி ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

காமசாரயை வித்மஹே
காமநிஷ்டாயை தீமஹி
துரித விஸ்வா தீமஹி
தன்னோ சுவாதி ப்ரசோதயாத்

மாற்றமிலாத முடிவுடையாய்
மறுத்திட இயலா இயல்புடையாய்
முக்திக்கு மூல காரணமாய்
முற்றாய் ஆனாய் நமோ நமோ

கற்பனைக் கெட்டா சிந்தனைகள்
கணமும் அகலா செயல்வடிவம்
ஹரிஹரி ஓம் நமோ நாராயணா
நலம் தரும் சொல்லே நாராயணா

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. சுவாதி கவிதை

சாட்சாத்காரமே உன்னியல்பு – உடனடியே
காட்சி அதிகாரமே நின்வரலாறு – கடனடியே
மாட்சி அதிகாரிகள் நின்நாடல் – படையடியே
ஆட்சி பிரகலாதன் நாராயணம் – உறவடியே

அறிவியல் ஆயிரம் செயினும்
        இயற்கைக்கு கட்டுபட்டதே
அகிலத்தில் அனைத்தும் கிடைக்கினும்
        அண்டசராசரம் கற்பனைக்கெட்டாதே
அலுவலலில் இலக்கு எதுவரினும்
        அறிவுகூர்மை யோசனை நின்தீர்வே
அலைச்சலில் அலைகள்கூட குறையும்
        அறிவார்ந்த நின்மன அலைகள் ஓயாதே.

சர்வ தர்மம் நீக்கியே உனையே சரணடைவோம்
கர்ம பலன் நோக்கியே உனையே தியானிப்போம்
வர்ம நியமம் தாக்கவே உனையே வரவேற்போம்.
மர்ம கம்பம் தேக்கியே உனையே வர்ணிப்போம்.

மாற்றம் மட்டுமே நிலையானதென்று மாறுகிறாயா
மாற்றம் காணாத நிலைகொண்டு மாற்றுகிறாயா
மாறாத பிடிவாதம் நிலைபெற்றால் ஆற்றுவது யார்?
மாறிவரும் உலகில் சமரசம் காணவே சரபம் போலும்

பார்த்தால் பயங்கரம் பழக பழக அந்தரங்கம்
சேர்த்தால் சேமிக்காது சேர சேர ஸ்வாதியாகும்
அமைத்தால் அமர்வாகாது அமைய அமைய கற்பனைக்கெட்டாது
கூட்டினால் கூடாது எட்டு திக்கிலும் அது நரசிம்மம்

## 6. அபிராமி அந்தாதியில் சுவாதி சக்தி

**பொய்யுணர்வு நீங்க**

சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்,

பென்னம் பெரிய முலையும், முத்தாரம் பிச்சிமொய்த்து

கன்னங்கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில் வைத்துத்

தன்னந்தனி இருப்பார்க்கு இது போலும் தவமில்லையே.

**கடன் தீர**

இல்லாமை சொல்லி ஒருவர் தம்பால்சென்று இழிவுபட்டு

நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல், நித்தம் நீடுதவம்

கல்லாமை கற்ற கயவர்தம்பால் ஒரு காலத்திலும்

செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

**மோனநிலை எய்த**

மின்னாயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்றது

அன்னாள்; அகமகிழ் ஆனந்தவல்லி; அருமறைக்கு

முன்னாய் நடுஎங்குமாய் முடிவாய முதல்விதன்னை

உன்னாது ஒழியினும், உன்னிலும் வேண்டுவது ஒன்று இல்லையே.

**யாவரையும் வசீகரிக்கும் ஆற்றல் உண்டாக**

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலம் எங்குமாய்

நின்றாள், அனைத்தையும் நீங்கி நிற்பாள்என்தன் நெஞ்சினுள்ளே

பொன்றாது நின்று புரிகின்றவா; இப்பொருள் அறிவார்

அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் சுவாதி சக்தி ஓம்... ஓம்... ஓம்...

ஓம் மஹர்ஷயே – கபிலாசார்யாய நம – வேதங்களின் விற்பனரே போற்றி

ஓம் க்ருதஜ்ஞாய நம – உலகத்தின் விளைவே போற்றி

ஓம் மேதிநீபதயே நம – உலகியல் வித்தகரே போற்றி

ஓம் த்ரிபதாய நம – முக்குண முதல்வனே போற்றி

ஓம் த்ரிதஸாத்யக்ஷய நம – தூக்கத்திலும் சுறுசுறுப்பே போற்றி

ஓம் மஹாஸ்ருங்காய நம – எந்நேரமும் ஈர்ப்பே போற்றி

ஓம் க்ருதாந்தக்ருதே நம – உலகியல் நிர்வாகமே போற்றி

ஓம் மஹாவராஹாய நம – மகா வராஹமே போற்றி

ஓம் கோவிந்தாய நம – வார்த்தைகளின் மழையே போற்றி

ஓம் ஸுஷேணாய நம – இறையாண்மை துணையே போற்றி

ஓம் கநகாங்கதிநே நம – தங்க ஆபரணமே, உபகரணமே போற்றி

ஓம் குஹ்யாய நம – உபநிடதங்களின் செயலறிவே போற்றி

ஓம் கபீராய நம – கடவுளின் கம்பீரமே போற்றி

ஓம் கஹநாய நம – கனவும், நினைவும் விழிப்புணர்வே போற்றி

ஓம் குப்தாய நம – எண்ணம், சொல், செயல் சிறப்பே போற்றி

ஓம் சக்ர – கதாதராய நம – ஒளி சக்கரமும், உதை கதையும் நீயே போற்றி

ஓம் வேதஸே நம – சட்ட திட்டங்களின் விதானமே போற்றி

ஓம் ஸ்வாங்காய நம – அடிமுதல் முடிவரை பணியாளனே போற்றி

ஓம் அஜிதாய நம – திருவிளையாடலில் தோற்காத அவதாரமே போற்றி

ஓம் க்ருஷ்ணாய நம – கிருஷ்ணனின் இரட்டை நிலையே போற்றி

ஓம் த்ருடாய நம – மாற்றமில்லா மாண்புடை மானுடமே போற்றி

ஓம் ஸங்கர்ஷணாச்யுதாய நம – பிரளயத்திலும் உயிர்வாழ் அச்சுதனே போற்றி

ஓம் வருணாய நம – மாலை வீணையே, வீசு தென்றலே போற்றி

ஓம் வாருணாய நம – வாழ்வின் சுவையே வட்ட நிலவே போற்றி

ஓம் வ்ருக்ஷய நம – கற்பகத்தருவே, கனியே, அமுதே போற்றி

ஓம் புஷ்கராக்ஷய நம – விழிப்புணர்வின் ஒளி சேர்க்கையே போற்றி

| | |
|---|---|
| ஓம் மஹாமநஸே நம | – மாயை மனங்கூறும் வெற்றிகளே போற்றி |
| ஓம் பகவதே நம | – பகவானின் ஐந்தொழில் முகவரே போற்றி |
| ஓம் பகக்நே நம | – பிரபுத்துவம் விரும்பாத சாமான்யமே போற்றி |
| ஓம் ஆநந்திநே நம | – வாழ்வின் சுவையே, பூங்காற்றே போற்றி |
| ஓம் வநமாலிநே நம | – தனை மறந்த ஆனந்தமே போற்றி |
| ஓம் ஹலாயுதாய நம | – ஐவகை மலர்களின் மாலை அணிந்த வனராணியே போற்றி |
| ஓம் ஆதித்தாய நம | – பரசு எனும் ஆயுத மேலாளனே போற்றி |
| ஓம் ஜ்யோதிராதித்யாய நம | – விருந்துக்கு செல்லும் அற்புதமே போற்றி |
| ஓம் ஸஹிஷ்ணவே நம | – பகலவனின் பல கலைகளே போற்றி |
| ஓம் கதிஸத்தமாய நம | – கோடை குளிர் இரு நிலையிலும் மூழ்கியவனே போற்றி |

## 8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் சுவாதி சக்தி

நித்யக்லின்னா நிருபமா நிர்வாணஸுகதாயினீ
நித்யாஷோடசிகாரூபாஸ்ரீகண்டார்த்த சரீரிணீ

ப்ரபாவதீப்ரபாரூபா ப்ரஸித்தா பரமேச்வரீ
மூலப்ரக்ருதி ரவ்யக்தாவ்யக்தாவ்யக்த ஸ்வரூபிணீ

வ்யாபினீ விவிதாகாரா வித்யா வித்யா ஸ்வரூபிணீ
மஹாகாமேச நயன குமுதாஹ்லாதகௌமுதீ

பக்தஹார்ததமோபேதபானுமத்பானு ஸந்ததி
சிவதூதீ சிவாராத்யா சிவமூர்த்தி சிவங்கரீ

சிவப்ரியா சிவபரா சிஷ்டேஷ்டா சிஷ்டபூஜிதா
அப்ரமேயாஸ்வப்ரகாசாமனோவாசாமகோசரா

சிச்சத்திச்சேதனாரூபா ஜடசக்திர் ஜடாத்மிகா
காயத்ரீவ்யாஹ்ருதி ஸந்த்யா த்விஜப்ருந்த நிஷேவிதா

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் சுவாதி சக்தி

நன்கறிந்து கொண்டேன் நானும் உனதருளால்

விட்டிட மாட்டேன் ஸ்கந்தா வீட தருள்வீரே

நடுநெற்றித் தானத்து நானுனைத் தியானிப்பேன்

ப்ரம்ம மந்திரத்தைப் போதித்து வந்திடுவாய்

சுழுமுனை மார்க்கமாய் ஜோதியைக் காட்டிடுவாய்

சிவ யோகியாக எனைச் செய்திடும் குருநாதா

ஆசை அறுத்து அரனடியைக் காட்டிவிடும்

மெய்யடி யராக்கி மெய்வீட்டில் இருத்திவிடும்

கொங்கு நாட்டிலே கோயில் கொண்ட ஸ்கந்தகுரோ

கொல்லி மலைமேலே குமரகுரு வானவனே

கஞ்சமலை சித்தர் போற்றும் ஸ்கந்தகிரி குருநாதா

கருவூரார் போற்றும் காங்கேயா ஸ்கந்தகுரோ

மருதமலை சித்தன் மகிழ்ந்துபணி பரமகுரோ

சென்னிமலைக் குமரா சித்தர்க் கருள்வோனே

சிவவாக்கிய சித்தருளைச் சிவன்மலையில் போற்றுவரே

பழனியில் போகருமே பாரோர்வாழப் ப்ரதிஷ்டித்தான்

புலிப்பாணி ஸித்தர்களால் புடைசூழ்ந்த குமரகுரோ

கொங்கில் மலிந்திட்ட ஸ்கந்த குருநாதா

கள்ளம் கபடமற்ற வெள்ளை யுள்ளம் அருள்வீரே

கற்றவர்களோ டென்னைக் களிப்புறச் செய்திடுமே

உலகெங்கும் நிறைந்திருந்தும் ஸ்கந்தகுரு உள்ள இடம்

ஸ்கந்தகிரி என்பதை நான் கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்.

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

## 10. கந்தர் அநுபூதி சுவாதி சக்தி

மின்னே நிகர் வாழ்வை விரும்பிய யான்

என்னே விதியின் பயன் இங்கு இதுவோ?

பொன்னே, மணியே, பொருளே, அருளே,

மன்னே, மயில் ஏறிய வானவனே.(27)

ஆனா அமுதே, அயில் வேல் அரசே,

ஞானாகரனே, நவிலத் தகுமோ?

யான் ஆகிய என்னை விழுங்கி, வெறும்

தானாய் நிலை நின்றது தற்பரமே.(28)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

## 11. ராகங்களில் சுவாதி சக்தி

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| ஜாலர்நவம் | ஜாலவராலி | நவநீதம் | நவநீதம் |

## 11. மூலமந்திரம்

ஹரி ஓம் நமோநாராயணா

## 12. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| மருதை | அத்தி | அரசு | புளிய |

## 13. பரிகாரம்

- நெல்லிச்சோறு தானம் செய்யவும்.
- வெள்ளை எல்லும் சர்க்கரையும் மரத்தின் வேரடியில் கொட்டவும்.
- இளைஞர்களுக்கு பேனா பென்சில் தானம் செய்யவும்.

- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு தாத்திரீஸ்வரர் திருக்கோயில்,** சித்துக்காடு - சென்னை.


**Aathma Trust (ஆத்ம லிங்கம்)**
Regd No: 96/19
33.கோசாலை, கிரிவலம்,
திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org
www.yaasha.in
**Email :** jhohumm@gmail.com
**Youtube :** aathmanakshatra